# අධ්‍යාපන අමාත්‍යාංශය
# கல்வி அமைச்சு
# Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/09/12/02/01

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2021.06.16

சுற்றுநிருப இலக்கம்: 11/2021

அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்கள்
அனத்து வலய கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து கோட்ட பொறுப்பு பிரதி/ உதவி கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து அதிபர்கள்

<u>க.பொ.த (உயர் தர) பாடத்துறையில் கொரிய மொழியை சேர்த்தல்</u>

கல்வி பொது தராதர பத்திர (சாதாரண தர) பாடத்திட்டத்துக்காக 2015 ஆம் வருடத்தில் கொரிய மொழியை சேர்த்ததோடு அதனை வெளிநாட்டு மொழியாக கற்பதற்கும் வாய்ப்பை மேலும் விரிவு படுத்தவதற்காக க.பொ.த (உயர்தர) பாடத்துறையில் சேர்க்க வேண்டியது காலத்துக்கேற்ற அவசியமாக உணரப்படுகின்றது.

2.0 தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய க.பொ.த (உயர்தர) பாடத்துறையில் அறிமுகம் செய்யப்பட்ட கொரிய மொழி தொடர்பாக இந்த சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் இதன் பின்னர் வலுவில் இருக்கும்.

3.0 க.பொ.த (உயர்தர) பாடத்துறைக்கு 2021 ஆண்டு தொடக்கம் கலை பாடத்துறை பிரிவில் மொழி தொகுதியில் உப பாடமாக கொரிய மொழி சேர்க்கப்படுகின்றது. அதாவது, 'க.பொ.த (உயர்தர) பாடச் சேர்க்கை மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான பாடசேர்க்கை' தொடர்பான சுற்றுநிருப இலக்கம் 2016/13 மற்றும் 2016.04.26 திகதிய கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தில் 5.1.6 கலைப் பாடத்துறைக்காக பாடத்தொகுதியில் (ஏ) மொழி பாடங்களின் தொடரிலக்கம் 3யின் கீழ் உள்ளடங்கிய பாடங்களுக்கு மேலதிகமாக கொரிய மொழி பாடமும் உள்ளடக்கப்படுகின்றது.

4.0 அந்த பாடத்துக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்படுவதோடு ஆசிரிய பயிற்சியும் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

5.0 2021 கல்வி ஆண்டின் க.பொ.த. (உயர்தர) இற்காக தரம் 12 இல் அனுமதிக்கப்படும் மாணவ மாணவியருக்க 2021/2023 கல்வி வருடங்களில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்னர் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் முதற் தடவையாக கொரிய மொழிக்காக தோற்ற வாய்ப்பு கிடைக்கும்.

6.0 க.பொ.த (உயர்தர) பாட சேர்க்கை மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்காக பாட சேர்க்கை தொடர்பாக கல்வி அமைச்சு 2016.04.26 திகதிய 2016/13 சுற்றுநிருபம் இனிவருங்காலத்தில் திருத்தப்பட இருக்கின்றது.

அதன் படி க.பொ.த (உயர்தர ) கொரிய மொழி பாடம் தொடர்பாக உரிய தரப்பினரை அறிவுறுத்தி மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

பேராசிரியர் கே. கபில சீ.கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்
01. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
02. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
03. அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்
04. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
05. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம்